தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# இந்தி ஆலோசனைக்குழு உறுப்பினராக ஐசரி கணேஷ் நியமனம்



சென்னை, ஆக.21–

மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகத்தின் சார்பில் 'இந்தி ஆலோசனைக்குழு' அமைக்கப்பட்டு இருக்கிறது. மத்திய மந்திரி ஸ்மிரிதி ராணி தலைமையில் இந்தக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் லோக்சபா, ராஜ்ய சபா உறுப்பினர்கள், மத்திய அமைச்சகத்தின் செயலாளர்கள், இணை செயலாளர்கள் உள்ளிட்ட 30 பேர் உறுப்பினர்களாக இடம் பெற்று இருக்கின்றனர்.

அதில் தமிழகத்தில் இருந்து சென்னை பல்லாவரத்தில் உள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனரும், வேந்தருமான ஐசரி கே.கணேஷ் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். பல ஆண்டுகளுக்கு பிறகு, இந்தி ஆலோசனைக்குழுவில் தமிழகத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு இருக்கிறது.